அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் :160/2016
தேதி. : 20/10/2016

## சிவகாசி பட்டாசு கிடங்கில் வெடி விபத்து 8 பேர் பலியான பரிதாபம். சமக நிறுவனர் - தலைவர் ஆர்.சரத்குமார் இரங்கல்

விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் உள்ள பட்டாசு கிடங்கில் ஏற்பட்ட வெடி விபத்தில் 5 பெண்கள் உள்ளிட்ட 8 பேர் பலியான சம்பவம் மிகவும் வேதனைக்குரியது.

மேலும் வெடி விபத்து காரணமாக ஏற்பட்ட புகையால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு 20-க்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பலியானவர்களின் குடும்பத்தாருக்கு சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். மூச்சுத்திணறலால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்கள் விரைவில் குணமடையவும் இறைவனை பிரார்த்திக்கிறேன்.

மேலும் இதுபோன்று வெடிவிபத்துக்கள் ஏற்படாமல் பட்டாசு கிடங்கில் உள்ள ஊழியர்கள் அனைவரும் பாதுகாப்பாகவும், கவனத்துடனும் பணிபுரியவேண்டும்.

**ஆர்.சரத்குமார்** B.Sc.
நிறுவனத் தலைவர்